அன்பார்ந்த மலையக தோட்டத் தொழிலாளர்களே!

மக்கள் பிரதிநிதிகளே!

புத்தி ஜீவிகளே!

சமூக செயற்பாட்டாளர்களே!

அரச பணியாளர்களே!

இளைஞர் யுவதிகளே!

**தோட்டத் தொழிலாளர்களின் காணி, வீட்டு உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும், மாகாண சபைகள் மற்றும் சகல உள்ளுராட்சி சபைகளின் சேவைகள் தோட்டக் குடியிருப்புக்களுக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் தங்குதடையின்றி சென்றடைவதற்கு அரசை நிர்பந்திப்போம்.**

இந்நாட்டின் வெளிநாட்டு வருமானத்தில் 13 விகிதத்தை பெற்றுத்தரும் நாம், நாட்டின் பிரதான அபிவிருத்தி திட்டங்களை முழுமையாக அனுபவிப்பதில் இருந்து ஓரங்கட்டப்படுகின்றோம். மேலும் பெருந்தோட்ட தொழிற் துறைக்கு சொந்தமான உடைமைகளில் காணி, வீட்டு உரிமை அற்றவர்களாக தோட்டத் தொழிலாளாகிய நாம் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர்.

பிரதேச சபை சட்டத்தின் 33 வது சரத்து தடையாக இருப்பதன் காரணமாக எம்மால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச மற்றும் மாகாண சபைகளின் பிரதிநிதிகளால் எமக்கான அபிவிருத்திச் சேவைகளை சுதந்திரமாக பெற்றுக்கொடுக்க முடியாதுள்ளது.

அவ்வாறு பெற்றுக்கொடுத்தாலும் கூட மேற்படி 33 வது சரத்தை காரணம் காட்டி, குறிப்பிட்ட பிரதேச சபைகளை கலைக்கக் கூடிய அதிகாரத்தை மாகாண முதலமைச்சர் கொண்டுள்ளார். உதாரணமாக தோட்டத்துறைப்பகுதியிலுள்ள உடபலாத்த பிரதேசசபை அண்மையில் இக்காரணத்துக்காக கலைக்கப்பட்டது. சபைக்கெதிரான முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வருமாறு

- நிவ்பீகொக், கோவில் பாதையை கொங்கிரீட் செய்தமை
- செல்வகந்த கோயிலுக்கு செல்லும் பாதையை புனரமைத்தமை
- நிவ்பீகொக் தோட்டத்தில் தண்ணீர் தொட்டியை நிர்மாணித்தமை
- நிவ்பீகொக் ஓ.பி பிரிவில் இல.21, லயக்காம்பிராவிற்குச் செல்லும் பாதையைப் புனரமைத்தமை.
- மெல்போட் தோட்டத்தில் படிக்கட்டுகளை அமைத்தமை.

மேற்படி தோட்டப்பகுதிகளுக்கு செய்யும் அபிவிருத்தி பணிகளே குற்றச்சாட்டுகளாக ஆக்கப்படுவதால் சபை உறுப்பினர்கள் சுதந்திரமாக செயற்பட முடியாதென்பதையே இது காட்டுகிறது.

எதிர்காலத்தில் தோட்டத்தொழிலாளர்கள் தேசிய நீரோட்டத்தில் இணைய வேண்டுமானால்

- தோட்டக் குடியிருப்புக்கள் தோட்டத் தொழில் துறையில் இருந்து பிரிக்கப்பட்டு கிராமங்களாக்கப்பட வேண்டும்.

- தோட்டத் தொழிலாளர்களின் காணி, வீட்டு உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- பிரதேச சபை சட்டத்தின் 33 வது சரத்தை நீக்கி, தோட்டக் குடியிருப்புக்களுக்கு மாகாண சபைகள் மற்றும் சகல உள்ளூராட்சி சபைகளின் சேவைகள் தங்குதடையின்றி சென்றடைவதனை உறுதிப்படுத்த வேண்டும்.

எனவே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி

நமது பிரதேச, மாகாண மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பரிந்துரை செய்வோம்.

நமது தொழிற்சங்கத் தலைவர்களிடம் இது பற்றிய அழுத்தங்களை கொடுக்கும்படி பரிந்துரைப்போம்.

நமது நாட்டு ஜனாதிபதிக்கும் இது பற்றி பரிந்துரை செய்வோம்.

நமது நாட்டின் கட்சி தலைவா்களுக்கு இது பற்றி பரிந்துரை செய்வோம்.

நன்றி!

இங்ஙனம்,

**பெருந்தோட்டத்துறை சமூக மாமன்றம்.**

**சமூக அபிவிருத்தி நிறுவகம்**

**பெருந்தோட்ட கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனம்**

**இலங்கை தோட்டத்தொழிலாளர் (செங்கொடி) சங்கம்**

**சமூக நலனுக்கான நிறுவனம்**

**ஐக்கிய நலன்புரி நிறுவனம்**

**அரைசிங் சன் சமூக அபிவிருத்தி நிறுவனம்**

**பெருந்தோட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம்**

**அகில இலங்கை ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ்**

**ஊவா தொழிலாளர் அபிவிருத்தி நிதியம்**

**கிருஸ்தவ தொழிலாளர் பொழில்**